# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 161/7 — 1975 අප්‍රේල් 29 වැනි අඟහරුවාදා — 1975.04.29

161/7 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : ஐ 108 (2)

### கட்டளை

1968 ம் ஆண்டின் 37 ம் இலக்கக் கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தோடு சேர்த்து வாசிக்கப்படுவதும் 1957ம் ஆண்டின் 14 ம், 62 ம் இலக்க, 1962 ம் ஆண்டின் 4 ம் இலக்கக் கைத்தொழிற் பிணக்குகள் (திருத்த) அதிகாரச் சட்டங்களினால் திருத்தியமைக்கப் பட்டதுமான இலங்கைச் சட்டவாக்கங்களின் (131 ம் அத்தியாயமாகிய) கைத்தொழிற் பிணக்குகள் அதிகாரச் சட்டத்தின் 22 ம் பிரிவின்படி சனாதி பதிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, விலியம் கொபல்லவ ஆகிய நான் இதனகத்தேயுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்ட பேர்வழியினை 1975 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ந் தேதி வெளியாகிய 153/1 ம் இலக்க இலங்கைக் குடியரசின் அதிவிசேட செய்திமடலில் பிரசுரமாகிய பதிற் சனாதிபதியின் 1975 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ந் தேதிய கட்டளையின் பிரகாரம், 1975 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3 ந் தேதி முதலாக ஓராண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்ட குழாத்தினுக்கு, மேலதிக உறுப்பினராக இத்தால் நியமிக்கின்றேன்.

வி. கொபல்லவ,<br>சனாதிபதி.

சனாதிபதியின் அலுவலகம்,<br>கொழும்பு,<br>1975 ம் ஞு ஏப்பிரில் 28 ந் திகதி.

அட்டவணை

ஹென்றி விஜயதிலகா.

4–566

---

### 1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா அரச வியாபாரக் கூட்டுத்தாபனச் சட்டம்

#### 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1970 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா அரச வியாபாரக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம், 10 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்குரித்தாக் கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சரான டிக்கிரி பண்டா இலங்கரத்ன ஆகிய நான், இக்கட்டளையினால் வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சின் உதவிச் செயலாளரான திரு. ஜெயலத் சுறநிமல அமரசேகராவை ஸ்ரீ லங்கா அரச வியாபார (புடவைகள்) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கின்றேன்.

ரி. பி. இலங்கரத்ன,<br>வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார,<br>அமைச்சர்.

கொழும்பு,<br>1975 ம் ஞு ஏப்பிரல் மீ 22 ந் உ.

4–565

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.